The Hon. Thiru P. U. SHANMUGHAM : Government have sanctioned the establishment of a frozen semen laboratory and utilisation of frozen semen in the Madras Veterinary College during the current year.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் அளிக்கையிலே வெட்டரினரி காலேஜிலே இம்மாதிரி பேங்க் ஒன்று ஏற்படுத்தப் போவதாகக் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் இதனுடைய கிளைகளைத் திறந்தால் அந்தந்த மாவட்டங்களிலுள்ள கால்நடைகளை வளர்க்க இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, ஒவ்வொரு மாவட்டந்தோறும் கிளைகளைத் திறக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இது ஆலோசனை. இதுபற்றி ஆலோசிக்கலாம்.

வளவனூர் பெருந்தேவித் தாயார் கூட்டுறவு பால் விற்பனைச் சங்கம்

*** 282 வினா—திரு. மு. இராமன்** : மாண்புமிகு உணவு வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வளவனூர், பெருந்தேவித் தாயார் கூட்டுறவு பால் விற்பனைச் சங்கத்தில் கையாடல் செய்திருப்பதாக அரசாங்கத்திற்கு புகார் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அது சம்பந்தமாக அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

மத்திய அரசு நிறுவனங்களுக்கு பாதுகாப்பு

*** 269 வினா திரு. வி. கே.கோதண்டராமன்** : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நமது ராஜ்யத்தில் மத்திய சர்க்காருக்கு சொந்தமான தொழிற்சாலைகள் எத்தனை ? எதெது ?

(இ) அவைகளுக்கெல்லாம் மத்திய சர்க்கார் தனியாக போலீஸ் பந்தோபஸ்து படையை ஏற்படுத்தியுள்ளார்களா ?

(உ) அது விஷயமாக நமது சர்க்கார் எதிர்ப்புக் காட்டி எழுதியுள்ளார்களா ? விபரம் என்ன ?